

தோகா வங்கி சீதாராமனுக்கு அரபு வங்கிகள் சங்கத்தின் தலைவர் முகமது ஜர்ரா அல்—சபா விருது வழங்கினார்.

# தோகா வங்கி சீதாராமனுக்கு பசுமை பொருளாதார விருது

ரோம் நகரில் இத்தாலி பிரதமர் மாத்தியோ ரென்சி தலைமையில் அரபு வங்கிகள் சங்கத்தின் 2016ம் ஆண்டுக்கான சர்வதேச உச்சி மாநாடு மே மாதம் 29ம் தேதி தொடங்கி, 3 நாட்கள் நடந்தது.

மாநாட்டில் தோகா வங்கி தலைமை நிர்வாகி டாக்டர் ஆர்.சீதாராமனுக்கு 'பசுமை பொருளாதார தொலைநோக்கு விருது' வழங்கப்பட்டது. அவருக்கு அரபு வங்கிகள் சங்கத்தின் தலைவர் முகமது ஜர்ரா அல்—சபா விருது வழங்கினார்.கடந்த 20 ஆண்டுகளாக சுற்றுச்சூழல் பராமரிப்பு நடவடிக்கைகளில் சிறப்பான பணிக்காகவும், இதன் மூலம் பசுமை பொருளாதாரத்தை பிரபலப்படுத்தியதற்காகவும் டாக்டர் சீதாராமனுக்கு விருது வழங்கப்பட்டது.

ஸ்ரீஸ்ரீ பல்கலைக்கழகத்தில் 'பசுமை வங்கித்துறையும் அதன் தொடர் வளர்ச்சியும்' என்ற ஆய்வுக்காக பிஎச்டி உட்பட பல டாக்டர் பட்டங்களை சீதாராமன் பெற்றிருக்கிறார். மேலும், சீதாராமனுக்கு 'உலக அமைதிக்கான நோபல் பரிசு' வழங்க வேண்டும் என்று நாகரீகங்கள் கூட்டமைப்பின் ஐநா சிறப்பு தூதர் நாசிர் அப்துல் அஜீஸ் அல்—நசீர் சமீபத்தில் பரிந்துரை செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.